முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 06.02.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி.. | 06.02.2026 | சாட்சி.. | பி.வா.சா.1 |
| பெயர்.. | ஸ்ரீராமன் | வயது.. | 75 |
| தந்தை பெயர்.. | ரெங்கநாதன் | கிராமம்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. எனது தகப்பனார் ரெங்கநாதன், 1-8 பிரதிவாதிகள் ரெங்கநாதனின் வாரிசுகள் என்றால் சரிதான். 12-13 பிரதிவாதிகள் பத்மாவதியின் வாரிசுகள். 3 ம் பிரதிவாதி ராமதிலகத்தின் வாரிசுகள் 14-15 பிரதிவாதிகள். என் தகப்பனார் 18.10.1985 அன்று இறந்தார். என் தகப்பனார் ரெங்கநாதன் எந்த ஆண்டில் இருந்து எவ்வளவு காலம் வரை புவனகிரி வர்த்தக சங்கத்தின் தலைவராக இருந்தார் என்றால் ஆரம்ப ஆண்டு ஞாபகம் இல்லை சாகும்வரை தலைவராக இருந்தார். வழக்கு சொத்து 1890 இல் இருந்து 11 வது பிரதிவாதி புவனகிரி வர்த்தக சங்கத்திற்கு பாத்தியமானது. 11 வது பிரதிவாதிக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் 06.03.1944 கிரயம் வாங்கியது மூலமாக பாத்தியப்பட்டது. கிரயபத்திர அசல் என்னிடம் இருந்தது 05.03.1985 இல் கதவை உடைத்து எதிர் தரப்பில் எடுத்து சென்றுவிட்டனார். நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

2. நஷ்டஈடு கேட்டு தாக்கல் செய்த வழக்கு OS.17/1985 சிதம்பரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. வழக்கு சொத்தின் கதவு எண்.167/E ஆகும். முழு கட்டிடம் என்பது தரைதளமும் முதல் தளமும் கொண்டது ஆகும். மற்ற பகுதிகளில் தற்போது யார் யார் உள்ளார்கள் என்றால் எல்லாம் உடைந்து விட்டது அவர்கள் உடைத்து விட்டார்கள். மற்ற வாடகை தாரர்கள் எவ்வளவு காலமாக வாடகைக்கு வசிக்கவில்லை என்றால் 2009 இல் இருந்து ஆகும். மேற்சொன்ன கதவு எண்.167/E

என்பது முதல் முன் பகுதி கடை 8 x 18 கடை ஆகும், அடுத்த பகுதி 16 x 28 ஆகும் சாட்சி மீண்டும் 16 X 32 என்று கூறுகிறார். எந்த ஆண்டில் இருந்து மேற்சொன்ன கதவு எண்ணில் இருக்கிறேன் என்றால் எனது தந்தை காலத்தில் இருந்து இருக்கிறேன் குறிப்பிட்டு சொல்லஇயலவில்லை.

3. எந்த உரிமையில் வழக்கு சொத்தில் குடியிருக்கிறேன் என்றால் வழக்கு சொத்தில் பின்புரம் எனக்கு இடம் சொந்தமாக இருந்தது வழக்கு சொத்தில் நாங்களே வீடு கட்டிக்கொண்டு வாடகைக்கு வசிக்கிறோம். 1947 இல் எனது தகப்பனார் மேற்சொன்ன வீட்டை கட்டினார். நான் 06.12.1949 இல் பிறந்தேன். என் தகப்பனார் தான் மேற்சொன்ன வீட்டை கட்டினார் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது அந்த ஆவணத்தை எடுத்து சென்றுவிட்டனர். முன்புரம் இருக்கும் கடைக்கு வாடகை உள்ளதா என்றால் கடைகளுக்கு வேண்டிய பராமரிப்பு செலவுகளை நான் செய்வதால் வாடகை கொடுக்கவில்லை. என் தகப்பனார் சங்க தலைவராக இருந்து இறந்த பிறகு நான் தான் சங்க தலைவராக இருக்கிறேன். நான் தலைவராக இருக்கிறேன் எ ன்றாலும் எத்தனை பேர் உறுப்பினர்கள் என்றாலும் 14 பேர் உறுப்பினர்கள்.

4. மேற்சொன்ன 14 பேரும் புவனகிரியை சார்ந்தவர்கள் அங்கு தொழில் செய்து வருகிறார்கள். கடைகளுக்கு மொத்தம் எத்தனை வாடகை தாரர்கள் இருக்கிறார் என்றால் 4 வாடகைதாரர்கள் அவர்கள் சுந்தரேசஐயர், சோமு முதலியார், செல்வராசு, நான் உட்பட நான்கு பேர்கள் ஆவோம். நான் மேற்சொன்ன 3 நபர்களிடம் வாடகை ஒப்பந்தம் எழுதி வாங்கியிருக்கிறேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். தந்தை இறந்த பிறகு 2009 வரை அவர்களிடம் வாடகை பெற்ற வந்தேன். அதற்கான ஆதாரம் வைத்திருக்கிறேன் என்றால் வரவு செலவு கணக்கு புத்தகம் வைத்திருக்கிறேன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். ஒவ்வொரு வருடமும் தணிக்கை செய்வோம். யார் தணிக்கை செய்வார்கள் என்றால் மேலவீதியில் இருக்கிறார் , ஆடிட்டர் பெயர் ஞாபகம் இல்லை.

5. என் தகப்பனாருக்கு பிறகு நான் பதவி வகிப்பது எந்த வகையில் என்றால் 18.10.1986 இல் என்னை தலைவராக தேர்ந்தெடுத்தார்கள். மேற்சொன்ன தேதியில் meeting நடந்து நான் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு ஆவணம் உள்ளதா என்றால் அந்த ஆவணம் திருடப்பட்டதற்காக 10.11.2010 இல் புகார் அளிக்கப்பட்ட CSR உள்ளது. தற்போது சங்கத்தின் வரவி செலவு ledger என்னிடம் இருக்கிறதா என்றால்

என்னிடம் என்ன இருக்கிறதோ அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ACP ரத்தினசுப்பிரமணியன், கமலகண்ணன் மீது புகார் அளித்துள்ளேன். ACP ரத்தினசுப்பிரமணியன், கமலகண்ணன் ஆகியோருக்கு இந்த சங்கத்திற்கும் என்ன சம்மந்தம் என்றால் ACP ரத்தினசுப்பிரமணியன், கமலகண்ணன் வேறு சங்கம் 10 கடைகள் தாண்டி வைத்துள்ளார்கள். அவர்கள் சங்கத்தின் பெயர் வர்த்தக சங்கம், புவனகிரி. புவனகிரி வர்த்தக சங்கம் எந்த வருடம் பதிவு செய்யப்பட்டது என்றால் பதிவு செய்யப்படவில்லை.

6. நான் என்னுடைய சங்கத்தை பதிவு செய்யப்படவில்லை என்றால் 38/2003 இல் பதிவு செய்திருக்கிறேன். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். சங்கத்தின் வரவு செலவு கணக்கை ஒவ்வொரு ஆண்டும் பதிவு அலுவலகத்தில் கொடுக்கவேண்டும் என்றால் ஆடிட் செய்து பதிவு அலுவலகத்தில் கொடுத்து கொண்டு தான் வருகிறோம். 2009 இல் இருந்து மேறசொன்ன வாறு செய்ததற்கு ஆதார ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் 2002 இல் இருந்தே அவ்வாறு செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன். என்னுடைய சங்கத்திற்கு செயலாளர் மணிவண்ணன், பொருலாளர் ரமேஷ், துணை செயலாளர் வேல்முருகன், துணை தலைவர் மணிகண்டன் இருக்கிறார்கள். வழக்கு இடத்தில் நான் printing press வைத்து நடத்தி வருகிறேன். என் சங்கத்தில் மற்ற பொருப்பில் இருப்பவர்கள் மணிவண்ணன் புவனகிரியில் பட்டு கடைவைத்திருக்கிறார், மேல்முருகன் டீ கடை, மணிகண்டன் பேபர் ஸ்டோர், ரமேஷ் இரும்பு கடை வைத்து நடத்தி வருகிறார்கள். என் சங்கத்தின் புவனகிரி வர்த்தக சங்கம் என்கிற பூராசாமி வர்த்தக சங்கம் ஆகும். என் தந்தையால் நடத்தப்பட்டது புவனகிரி வர்த்தக சங்கம், புவனகிரி என்றால் சரிதான். வாதி சங்கத்திற்கு எத்தனை உறுப்பினர்கள் என்றால் அதை பற்றி தெரியாது.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.